உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு


துணர் ௰சூ { விக்கிரம—தை } மலர் ௰



| | | |
|---|---|---|
| க. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 359 |
| உ. | தமிழ்ச் செய்திகள் | 361 |
| ௩. | மன்னர் பெருமான் நல்லுரை | 363 |
| ச. | இமயஞ் சேர்ந்த காக்கை<br>உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் | 367 |
| ரு. | கலைச் சொல் லாக்கம்<br>திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி. | 376 |
| சூ. | சித்தாந்தப் பிரகாச சபை<br>திரு. ப. அரங்கநாதம் | 381 |
| எ. | ஞானியார் மடம்—விடு முறை வகுப்பு | 382 |
| அ | தொல்காப்பியம்—பொருள் | 5—12 |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ்சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.


கரந்தைக் கூட்டுறவு மின் இயக்கிப் பதிப்பகம், தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் யிகூ | விக்கிரம—தை | மலர் ய |
|---|---|---|

## பொழிற்றெண்டர் கருத்துரைகள்

### பொங்கல்

**பொங்கல் நன்னாளிலே, தமிழ்ப் பெரு மக்களுக்கும், சிறப்** பாகத் **தமிழ்ப்** பொழில் அன்பர்கட்கும் எம் வாழ்த்தும் நன்றியும் கூறுகின்றோம்.

பொங்கல் தமிழ் மக்களுக்கே உரிய ஒரு திருநாள் ஆகும். வேளாண் மக்களெல்லாம், இறைவன் திருவருளாலே மழை வளம் முதலியன ஒத்து வரப் பெற்றவற்றை, அத் திருவருளின் கொடையெனவே கொண்டு வணங்கி வாழ்த்தும் முறையிலே நிகழ்கின்றது இத் திருநாள். இந்தத் திருநாளிலே தான் ஒவ்வொரு வேளாண் மகனும் அந்தந்த ஆண்டிற் பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்டு களிக்கும் புது நன்னாள் தொடங்கும். இத் தகைய பொங்கல், நம் அன்பர்கட் கெல்லாம் அடுத்தடுத்துப் பெருக வேண்டு மென்றும், அதனாலாம் களிப்பும் மகிழ்ச்சியும் மேன்மேலும் பொங்க வேண்டு மென்றும் இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

௦ ௦ ௦ ௦

**வேளாண் மகன் தான் பெற்ற பேற்றினையும், அப்பேற்றினைத்** தந்த இறைவன் திருவருளையும் நினைந்து மகிழ்வது போல, யாமும், நம் தமிழ் மக்கள் தமிழ்த் தாய்க்கு ஆற்றிவரும் தொண்டின் திறத்தையும், அத்தொண்டின் பயனும் நிகழ்ச்சிகளையும் கண்டு கண்டு பேருவகை கொள்கின்றோம். தமிழ்

மக்கள் தமிழ்த் தாயிடத்துக் காட்டும் அன்பும் பற்றும் நாளும் நாளும் பெருகி வருகின்றதை யாம் மிகப் பெருமிதத்துடன் நோக்கி மகிழ்கின்ஞேம்.

ⓞ ⓞ ⓞ ⓞ

**ஆங்காங்குப் பலப்பல கழகங்கள் தோன்றித் தமிழ்ப் பணியாற்றி** வருவதும், தமிழ் மக்கள் மேன்மேலும் ஊக்கம் மிகுந்து, தமிழ் மொழியை வளர்க்க முன்வருவதும், கலித்தொகை, குறுந்தொகை, அகநானூறு போன்ற நூல்களின் சார்பாக ஒவ்வொரு தனித் தனி மாநாடுகள் கூடி ஆராய்ச்சி செய்வதும், தமிழ்த் திங்கள் வெளியீடுகள் முதலியன மிகுந்த தொகையினவாக வெளி வருதலும், புலவர் பெருமக்களெல்லாம் பல படியாகப் பாராட்டப் பெறுவதும், இன்னும் இவை போல்வன பிறவும் தமிழ் மக்கள் தமிழன்னை யிடத்துக் கொண்டுள்ள கடப்பாட்டுணர்ச்சியை விளக்குவதற்குப் போதிய சான்றுகளாம்.

ⓞ ⓞ ⓞ ⓞ

**பண்டிதர் திரு.ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கட்கும். பண்டிதமணி** திரு. **மு.** கதிரேச் செட்டியார் அவர்கட்கும் பாராட்டுக் கூட்டங்கள் கூட்டி, அவர்கட்குப் பொன் முடிப்புக் காணிக்கை செலுத்தவும், அத்திருவிழா நினைவு மலர் வெளியிடவும் அன்பர்கள் கருத்துக் கொண்டு முயன்று வருகின்ஞர்கள். இம் முயற்சி நல்வளம் பெறுவதாக.

ⓞ ⓞ ⓞ ⓞ

**அணித்தில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில்** கூடிய தமிழ்ப் பெருமக்கள், தமிழறிஞருட் சிலரது அருமை பெருமைகளைப் பாராட்டி, அவர்கட்குத் தகுந்த பட்டங்கள் தந்துள்ளது எமக்குப் பெரு மகிழ்ச்சி தருகின்றது. நம் சங்கத்து உறுப்பினர் **பண்டிதர்** திரு. **ந. மு. வேங்கடசாமி** நாட்டார் அவர்களும், **பண்டிதமணி** திரு. **மு.** கதிரேசச் செட்டியார் அவர்களும் முறையே **நாவலர், முது பெரும் புலவர்,** என்னும் பட்டங்கள் பெற்றிருக்கின்றனர். **இராவ்** சாகிப் திரு. **வெ. ப. சுப்பிரமணிய** முதலியார் அவர்கள் **தமிழ்ப் பெருங் கவி** என்றும் **முதுபெரும் புலவர்** என்றும் பெருமை பாராட்டப் பெறுகின்ஞர். பலதுறைகளிலும் அறிவு சிறந்து விளங்கும் திரு. **கா. சுப்பிரமணியபிள்ளை** அவர்கள் **பல்கலைப் புலவர்** என்று சிறப்பிக்கப் பெற்றிருக்கின்ஞர். இனிய கவிகளை ஆக்கித் தமிழுலகை மகிழ்விக்கும் திரு. **தேசிக**

விநாயகம் பிள்ளை அவர்கள் **தமிழ்க் கவிமணி** யென்று கொண்டாடப் பெற்றிருக்கின்றுர். சைவ சித்தாந்த ஆராய்ச்சி மிக்க திரு. எம்.வி. நெல்லையப்பபிள்ளை அவர்கள் **சித்தாந்தப் பேராசிரியர்** எனவும், பெரியபுராண விரிவுரை யாசிரியர் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் **சைவக் கவி மணி** எனவும் ஏத்தப் பெறுகின்றனர். இசை வல்லுநராகிய திரு. எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்கள் **தமிழிசை மணி** யென்று புகழப் பெற்றிருக்கின்றுர். இப் பேரறிஞர்கட் கெல்லாம் எம் மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேம். இத்தகைய பட்டங்கள் பெறுதற்குரிய ஏனைய மிகப் பெரும் பேரறிஞர்களும் பாராட்டப் பெறுவார்கள் என்று நம்புகிறேம்.

# தமிழ்ச் செய்திகள்

**சென்னை** மாகாணத் தமிழர் சங்கத்தின் 7-ஆவது கூட்டம், 25—12—40உ சென்னையில், திவான் பகதூர் திருவாளர், தி. மூ. நாராயணசாமி பிள்ளை யவர்களின் சீரிய தலைமையில் கூடியது.

o o o o

Dr. டி. எஸ். திருமூர்த்தி அவர்களின் வரவேற்புரையில் கூறிய சில செய்திகள்:

தமிழ்ப் புலமை நிரம்பிய அறிஞர்கள் அயன் மொழிகளிலுள்ள பேரிலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும்; தமிழிலக்கியங்களிற் காணும் மொழிச் செல்வங்களைப் பிற மொழியினரும் துய்க்குமாறும் செய்யவேண்டும்.

தமிழ் மொழியின் இயல் பழுதுபடாவண்ணம் காப்பதோடமையாது, புதுவ்தான மேனுட்டுக் கலைக் கருத்துகளைத் தமிழ் வழக்கில் கொணர்தற்பொருட்டுப் புதிய தமிழ்ச் சொற்களை ஆக்கவும் வேண்டும்.

பல்கலைக் கழகங்களும், ஆங்கிலங் கற்றேரும் கருத்துவைக்காமல் அசட்டை செய்தமையாலும், ஆங்கில அறிஞர்கள் தமிழ் மக்களுடன் தொடர்பு கொள்ளாது விலக்கமாய் இருந்தமையாலும், தமிழ்க் கல்வி சீர் குலையத் தலைப்பட்டது.

ஆங்கிலப் புலவர்களோடு ஒத்த நிலையில் தமிழ்ப் புலவர்களை நன்குமதித்து, அவர்களை ஊக்குதல் வேண்டும்.

௦ ௦ ௦ ௦

தலைவர், திரு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் கூறிய சில கருத்துகள்:

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், தமிழ்க் கல்விக்கென மிகக் குறுகிய நேரம் கொடுக்கப்படுகின்றது.

தமிழ் மொழியின் ஆக்கத்திற்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சங்கங்கள் இதுகாறும் செய்துள்ள நன் முயற்சிகளையும், அவற்றால் விளைந்திருக்கும் நற்பயன்களையும் கணித்தறிந்து, அவற்றை ஊக்கவும், வளர்க்கவும் வேண்டும்.

தமிழ் மக்கள், தமிழ் மொழியைத், தூய தமிழில் பேசவும், எழுதவும் பயிலவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் கல்விப் பயிற்சி, தாய்மொழியாகிய தமிழில் கூடாதென ஒரு சிலர் செய்துவரும் முயற்சியைக் கண்டிக்கவேண்டும்.

௦ ௦ ௦ ௦

தமிழிலும், தமிழ்க் கலைகளிலும் புலமை மிக்க அறிஞர்கள் சிலர்க்குக், கீழ்க் கண்டபடி, பட்டங்கள் அளிக்கப்பெற்றன:

1. திரு. இராவ் சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார்— 'தமிழ்ப் பெருங் கவி', 'முதுபெரும் புலவர்'
2. ,, எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவார்—'தமிழிசை மணி'
3. ,, பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார்— 'முதுபெரும் புலவர்'
4. ,, பண்டிதர். ந. மு. வேங்கடசாமி நாட்டார்—'நாவலர்'
5. ,, தேசிக விநாயகம் பிள்ளை—'தமிழ்க்கவி மணி'
6. ,, கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.— 'பல்கலைப் புலவர்'
7. ,, சி. கே. சுப்பிரமணிய முதலியார்—'சைவக்கவிமணி'
8. ,, எம். வி. நெல்லையப்ப பிள்ளை— 'சித்தாந்தப் பேராசிரியர்'

௦ ௦ ௦ ௦

கீழே காணும் கருத்துப்பட சில முடிபுகள் செய்யப் பெற்றன:

1. கலைச்சொல் ஆக்க வேலைக்கு இச்சங்கம் இயற்றிய **கலைச் சொற்களை** ஏற்ற பீடிகை. இவ் வேலையை முடிக்க அரசியலார் அமைக்கும் கழகங்கள் ஏற்றவையல்ல. தென் னிந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுவான கலைச்சொற்களை ஆக்க நினைப்பதும், அவற்றை இந்தியப் பேச்சு வழக்கற்ற மொழி (Classical language) ஒன்றன் வேர்ச் சொற்களிலிருந்து ஆக்குவதும் அடாத செயல்கள். வடமொழி, அராபி மொழி, பாரசீக மொழிகளின் துணையால் செய்யப்படும் கலைச்சொற்கள் மொழி யியல்களைக் குளறுபடையாக்குவதாகும்.

2. திருப்பதி தேவத்தானத்தில் நடைபெற்றுவரும் வேங்கடேசர் கீழை மொழிக் கழகத்தில், தமிழ் மொழிப் பயிற்சிக்கும், ஆராய்ச்சிக்கும் முதலிடம் தரவேண்டும்.

3. தமிழ் நாட்டி லுள்ள உயர்தரப் பள்ளிக்கூடங்கள் அனைத்திலும், தமிழ்மொழிவாயிலாய்க் கலைகளைக் கற்பிக்க வேண்டும்.

4. திருக்கோயில்களில் குருக்கண்மார்களும், ஓதுவார்களும் செவ்வனம் பணிபுரிதல் கருதித், தமிழ் நாட்டின் எல்லைக்குள் மூன்றிடங்களில் ஏற்ற கல்வி நிலையங்களை நிறுவ, இந்து சமய அறக் கழகம் ஆவன செய்யவேண்டும்.

---

## கிறித்துப் பண்டிகை நன்னாளில் மன்னர்பெருமான் கூறிய நல்லுரை

---

**உலகம்** அமைதியுற்றிருக்கும் காலத்தில், இளைஞர், முதியர் ஆகிய அனைவரும், நமது இல்லங்களில், ஒருங்கிருந்து, கிறித்து நாள் கொணரும் நற்செய்தியை நினைந்தும், உண்டு களித்தும் இன்புற்றிருப்போம். இந் நன்னாள் சிறப்பாகக் குழந்தைகளின் நாளாகும். அன்னார் எங்கிருந்தாலும், இந்நாள் அவர்கட்கு இனிமை தருமாறு, எம்மால் இயன்றதைச் செய்வோம்.

பல வகையான துயரங்களுடன், பிரிவினால் வரும் துன்பத்தையும் போர் வருவிக்கின்றது. இற்றை நாளில், தத்தம் இல்லங்களிலிருந்து தொலைவான இடங்களில், பல மனிதர்கள் போர் முனையில் நிற்கின்றனர் ; மாற்றானது படை எப்பொழுது வருமென்று விழிப்புடனிருந்து, அதனைத் தடுப்பதற் பொருட்டு, முனைந்திருக்க வேண்டியிருக்கின்றது ; கருங்கடலைக் காக்க வேண்டியிருக்கின்றது ; லிபியன் பாலையில் முறிபட்டு, ஓட்டமெடுக்கும் எதிரியை வெருட்டப் பின் தொடர வேண்டியிருக்கின்றது. மிகப் பல குடும்பங்கள் பிரிந்து, சிதறுற்றிருக்கின்றன.

ஆங்கிலக் குடியிற் பிறந்த சின்னஞ்சிறு குழவிகள், இன்று, கானடா, ஆத்திரேலியா, நியூசிலெண்டு, தென் ஆபிரிகா முதலிய நாடுகளில் வாழ்கின்றனர். ஆங்கிலப் பொதுவரசு (Commonwealth) நாடுகளிலுள்ள ஆண்மகார் அனைவரும், ஒருங்கு திரண்டு, தாய் நாட்டின் அற்றங் காத்தற்பொருட்டுத் துணை செய்ய முற்பட்டிருக்கின்றனர்; அதனோடுஅமையாது, ஆங்குள்ள மக்கள் அனைவரும், தத்தம் இல்லங்களின் கதவங்களைத் திறந்து வைத்து, இற்றை நாட் போர் முறையில் நிகழும் தீமைகள் பாலகர்களைத் தாக்காது காப்பதற்காக, அவர்களை அன்புடன் வரவேற்கின்றனர்.

ஐக்கிய நாடுகளிலும் (United States) கூட, விரிந்த மனதுடைய நமது நண்பர்களும், நட்புள்ள நிலையங்களும், அளவுபடாத உதவியை நமக்குச் செய்துவருவதுடன், போர் முடியும் வரை, நமது குழந்தைகளை வைத்து அன்புடன் பாதுகாக்க ஆவலுடன் பணி புரிந்துவருகின்றனர். பாதுகாவலுள்ள இடங்களுக்கு இன்னும் அகற்றப்படாது, தத்தம் வீட்டிலே இருந்து வரும் குழந்தைகளின் எண்ணிக்கை இன்னும் மிக அதிகமாயுள்ளது.

தாய், தந்தையர்களைப் பிரிந்து, தூரதேயங்களில் உள்ள எல்லாக் குழந்தைகட்கும், தத்தம் இல்லங்களிலிருந்து வரும் குழந்தைகட்கும், அக் குழந்தைகளிடம் அன்பு வைத்து, அவர்களைப் பாதுகாத்து வரும் மெய்யன்பர்கட்கும், தமதருமைக் குழந்தைகளைப் பிரிந்திருக்கும் தாய் தந்தையர்க்கும், இக் கிறித்து நன்னாள் இன்பத்தை அளிப்பதாக!

இப் புத்தாண்டு நமக்கு வெற்றியைத் தருவதாக! எதிர் காலத்தில், நமது இல்லங்களில், நாம் ஒருங்கிருந்து, கழிபேரு வகையுடன் வருங்காலக் குறித்து நாட்களில் நாம் இன்புற்றிருக்க நம்மை உய்ப்பதாக!

இங்கும், தொலைவி லுள்ள நாடுகளிலும் இருந்துவரும் முதி யோர்கட்கு யான் சொல்ல விரும்புவது ஒன்று:

முன் நிகழ்ந்த பெரும் போரில் நமது வாலிப மறவர்கள் இறந்தொழிந்தனர்; எஞ்சி நின்ற மக்கள் போரின் திறத்தைச் சிறிதும் அறிந்திலர். இற்றை நாளிலோ, நாம் அனைவருமே போரின் முன்னணியில் நிற்கின்றோம்! அதன் கொடுமைகளையும் ஒருங்கிருந்து தாங்குகின்றோம்! நாம் இவ்வாறிருப்பதை நன் குணர்ந்த முதியோர்கள் இறுமாந்திருக்கின்றனர்.

போரானது நமது சுற்றத்தை இவ்வாறு பிரிக்கிறதெனி னும், நமக்குள் புதுவதான ஒருமையை விளைக்கின்றது, நாம் விருப்புடன் பொதுவில் ஏற்கும் இன்னல்களாலும், நம்மனை வர்க்கும் நிகழும் தீங்குகளாலும், நமக்குள் விளையும் ஒருமைப் பாடு விழுப்பயனுடையது என்பனவற்றை நினைவில் இருத் துங்கள்.

உற்ற துணைவர்களாயும், நல்ல அயலவர்களாயும், துன்பத் தில் ஒருங்கிருப்பது, குடிமக்களுக்கு வாய்க்கும் சிறந்த குண மாகும். துன்பங்களைத் துணிபுடனும், இடர்களை மகிழ்வுடனும் தாங்குவதால், தத்தம் கடமைகளைச் செவ்வனம் ஆற்றுவதன்றிப், போரின் முன்னணியில் நிற்கும் வீரர்கட்குத் துணைபுரிந்தும் வரு கின்றனர். கடந்த சில மாதங்களில், அடுத்தடுத்துப், பன்முறை களில், இங்கிலாந்தி லுள்ள நமது பட்டினங்களும், நகர்களும் தகர்த்தெறியப் படுவதையும், தமக்கு வரும் அளவிறந்த இன்னல் களை ஆங்கில மக்கள் துணிகரமாய்த் தாங்குவதையும், யான் கண்ணுரக் கண்டு வருகின்றேன். இத்தகைய வீரர் குடியிற் பிறந்தமை கருதித் தருக்குற்றிருத்தலே அமையும் என்று இவர் களைக் குறித்து யான் போற்றுதல் என்னுல் ஆகும். துன்பத்தில் துணையாவார்கட்குள் நட்பும் தோழமையும் வளர்ந்து வருவதை யும், பொறுப்புகளையும் உடைமைகளையும் அனைவரும் பகிர்ந்து கொள்வதையும், எல்லாப் புறங்களிலும் யான்காண்கின்றேன்,

அளவுபடாத துன்ப நிலையிலிருந்து, நமக்குள் விளைகின்ற ஒருமைப்பாடு எனும் அரும்பொருளைப், போரினால் நிகழும் இன்னல்களைக் கடந்து, யாம் வெற்றியுடன் திகழும் எதிர்காலத்தில், யாம் கொண்டுய்க்கவேண்டும் விருப்பே எனது உளத்தில் நிலவுகின்றது.

கிறித்து நன்னாட்கள் இன்ப நிலையையும், உலகெங்கும் நல்லெண்ணங்களையும் எய்துவிக்கும் எதிர்காலத்தில், இதுபோது நம்மனைவரையும் ஒருமைப்படுத்தும் நல்லுணர்ச்சியை யாம் விடாது பற்றவேண்டும். ஆண், பெண் ஆகிய நாமனைவரும், இந் நல்லுணர்ச்சியை, நமது வாழ்க்கையில் வைத்து ஆளவேண்டும் ; உலகமக்கள் அனைவரும் இதனை மிகமிக இன்றியமையாத பொருளெனக் கொள்ளவேண்டும்.

நம்மைப்பற்றிக் கொஞ்சமாகவும், பிறரைப்பற்றி அதிகமாகவும் நினைந்து, நாம் ஒவ்வொருவரும் நடக்கப் பயிலவேண்டும், அப்பொழுதுதான் இந்நில உலகு நல்லிடமாகும்; நமது வாழ்க்கையும் சீர்மையும் சிறப்பும் உறும்.

உங்களனைவர்க்கும் கிறித்து நன்னாள் இனிமை யாகுக ! இப் புத்தாண்டு மிகமிக இனிமையாகுக! என வாழ்த்துகின்றேம். கலக்க மில்லாத நம்பிக்கையுடன் புது ஆண்டினை நாம் வரவேற்கலாம். பேராபதத்தை யாம் கடந்து விட்டோம். இன்னும் நமக்கு எதிரே நிற்கும் அபாயங்களும், இடர்களும் சிறியனவல்ல. நிலத்திலும், வானத்திலும், கடலிலும், நமது போர் வீரர்களும், அவர்களின் துணைவர்களும், வீரத் திறனுடன், இதுகாறும், நிலையிட்ட வெற்றிகளால், துணிகரத்தையும் தேற்றத்தையும் அடைகின்றோம்.

எதிர்காலம் மிக்க கடுமையானது. ஆனால் வெற்றியைக் கொடுக்கும் பெருவழியில் யாம் கால் கொண்டிருக்கின்றோம் ! இறைவன் துணையால், நீதியையும், அமைதியையும் யாம் தலைக் கொள்வோம்.

# இமயஞ் சேர்ந்த காக்கை

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

**இமயஞ் சேர்ந்த காக்கை** என்று நான் மூன்று வார்த்தையிலே சொல்லிவிட்டேன். யாப்பருங்கலக் காரிகை நூலாசிரியர், அழகிய சொற்களை முன்னும் பின்னும் அடுக்கிப், 'பனி மாவிமயப் பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங் காக்கை' என்கின்றார். கருங் காக்கை சரிதான் ; 'பொல்லா' என்று ஏன் அடை கொடுக்கவேண்டும்? நூலாசிரியர் சிறுவராக விருந்த காலத்திலே, காக்கை வந்து கையி லிருந்த அப்பத்தைப் பறித்துக்கொண்டு போயிருக்கலாமோ? ஒரு வேளை இருக்கலாம். நான் சிறுவனா யிருக்கும்பொழுது கூட, ஒரு நாள், ஒரு காக்கை, என் கையி லிருந்த அப்பத்தைப் பறித்துக்கொண்டு போய்விட்டது. அப்படிக் காக்கை செய்தது திருட்டுச் செயல் அல்ல, நட்புச் செயல் என்று எனக்குப் புலப்பட்டது. மற்றொரு நாள், பக்கத்து வீட்டுச் சிறுவன் என் கையிலிருந்த அப்பத்தைப் பறித்துக்கொண்டு ஓடினான்; பின்னே தொடர்ந்து சென்று, நான் பிடிக்கப் போகும் தருணத்திலே, அப்பத்தைப் புழுதியிலெறிந்துவிட்டு, நகைத்தான். அவன் எனது நண்பன் ; காக்கையும் அப்படியே.

சிறு குழந்தை, 'குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி'க், காக்கையைப் பிடிக்கப் போகிறது. குழந்தையின் கை தனது முதுகிற் படும்வரையும் அசையாம லிருந்த காக்கை, மெல்லென எழுந்து, ஒரு பாகந் தள்ளி, உட்காருகிறது. குழந்தை மீட்டுந் தொடர்ந்து, தொடப் போகுஞ் சமயத்திலே, இன்னுமொரு பாகந் தள்ளி, உட்காருகிறது. குழந்தையும் காக்கையும் நண்பர்கள் ; 'காக்கா! கண்ணுக்கு மை கொண்டுவா!' என்று குழந்தை பாடுகிறது. இலகுவாக எழுந்து, பறந்து, மெல்லென

அமருவதனுலே, பஞ்ச தந்திர நூலாசிரியர், முன்னொரு காக்கைக்கு, 'லகுபதனன்' என்று பேரிட்டு வழங்கினரோ; வேறேதாவது காரணம் இருக்குமோ, தெரியவில்லை. பஞ்ச தந்திரத்திலே நரித் தந்திரம் ஆகப் பெரிய தந்திரம்; காக்கைத் தந்திரத்தை அதற்கு அடுத்த படியாக வைக்கலாம். மூடர்கள் தந்திரியைப் பொல்லாதவனென்று சொல்லுவது வழக்கம். ஆனல், அமிதசாகரர் மூட ரல்லவே; 'தந்திரக் காக்கை' யென்று சொல்லியிருக்கலாம்; 'பொல்லாக் காக்கை' என்னும் பழிச் சொல் முறையாகுமா? இக் காலத்தி லுள்ள அமெரிக்க, ஐரோப்பியருள்ளே, அறிவு குறைந்த மக்கள், கரு நிற மனிதர் இழிந்தவர்கள், என்று நினைப்பது உண்டு. வெள்ளையருக்கு ஒரு சட்டம், கரியருக்கு ஒரு சட்டம் வகுப்பது, நாகரிகம் மலிந்த இக் காலத்திலே தான்; நீதிமானுன காரிகை நூலாசிரியர், இரு வேறு சட்டம் வகுத்துக் கூறுவாரா? அப்படியிருக்க மாட்டாது.

இந்த நிலையிலே, நூலாசிரியரது நீதியை அறிவதற்குப், பாட்டு முழுவதையும் ஆராய்ந்து பார்ப்பது முறையாகுமல்லவா? என்ன சொல்லுகிறுர் கேட்போம்.

'சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன்
யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழுப்பொரு ளாம்பனி
மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும்
பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேவிவ்
விருநிலமே.'

என்று, அவையி லிருந்த புலவர்களை முன்னிலைப் படுத்தி, ஆசிரியர் அவையடக்கங் கூறுகின்றுர்.

புலவர் கூட்டத்தைப், 'பொன்மா லிமயப் பொருப்பு' என்கின்றுர். மிகப் பொருத்தமான உருவகம்.

'அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.'

என்று, ஆசிரியர் பவணந்தியாரும்,

'நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.'

என்று ஆசிரியர் திருவள்ளுவனாரும் கூறுகின்றார்கள்.

என் கண்முன்னே தோன்றுகிற, 'நீலநிற விசும்பணவும் நெடுங்குடுமி மலைத்தொடர்கள்' நேடுமால் போலவும், புலவர் போலவும் காட்சி தருகின்றன. அஃதன்றியும், இம்மலை, கங்கைப் பேரியாறு தோன்று மிட மல்லவா? ஆதலினாலே, கவிப் பெருக்கினுக்கு ஊற்றிட மாகிய புலவர்கள், இமயத்திற்கு ஒப்பாதல் பொருத்த மாகு மல்லவா? அப் புலவர் முன்னிலையிலே அடங்கி நின்று, தமது நீர்மையினைப் பணிவினோடும் கூறுகின்ற ஆசிரியர், தம்மைப், 'பொல்லாக் கருங்காக்கை' என்கின்றார். ஆசிரியர், என்னைப் போலக், கரிய திருமேனியாக விருந்தாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எனது தாயார் நல்ல பொன்னிறமாக இருந்தார்கள். அவர்கள் என்னைப் பெற்றார்களோ, பிறரிடம் வாங்கி வளர்த்தார்களோ என்று, இளமையிலே, நான் நினைப்பதுண்டு. தந்தையாரது நிறம் எனது நிறம். ஆசிரியர் அமிதசாகரர் காக்கைபாடினியாரது வழி வந்தவ ரென்பது ஓர் பழங் கொள்கை. அதுபற்றி, அவர் காக்கை வண்ணத்தராக இருந்தார் எனத் திட்டமாகச் சொல்லலாமா? அதுவும் பொருந்தாது.

இவை ஒருபாலாகக், காக்கைக் குலத்துக்கே ஒரு பெரும் பழிச் சொல் ஏற்பட்டிருக்கிறது. இந்திரன் சிறுவன், காக்கை வடிவாக வந்து, சீதா பிராட்டியாரது திருமேனியைத் தீண்ட முயன்றானும். இராமபிரான், 'வல்லவன் கையிற் புல்லும் ஆயுதம்' என்றபடி, ஓர் அறுகம் புல்லினைக் கிள்ளி, அவ் வஞ்சக் காக்கைமீது எறிந்தாராம். இராமபாணம் தப்புவதே கிடையாது. காக்கை, மேலேழுலகம், கீழேழுலகம் எங்கும் பறந்து, பல தேவர்களிடம் முறையிட்டதாம். ஒன்றும் முடியாமல்,

கடைசியிலே, இராகவனையே சரண் புகுந்ததாம். அடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றும் அவ்வண்ணல், வஞ்சக் காக்கையினது ஒரு கண்ணைக் கொண்டு போம்படி, இராம பாணத்துக்குக் கட்டளை யிட்டாராம். அன்று முதலாகக் காக்கைக் குலம் அனைத்தினுக்குமே இரு கண்ணுள் ஒரு மணி யாயிற்றும். சயந்தன் செய்த பிழைக்குக் காக்கைக் குலம் ஈடு. இது என்ன நீதி? நமது முதற் றாய் தந்தையரை வஞ்சித்த சாத்தான், ஏதேன் தோட்டத்திலே, பாம்பு வடிவமாகப் புகுந்தானும். சாத்தானுடைய பிழைக்காக, யேகோவா, பாம்புக் குலம் முழுவதும் மண்ணிலே நகர்ந்து செல்லவேண்டுமென்று, சாப மிட்டாராம், பாம்புக் குலம் மண்ணில் நகரும் நீதியும், காக்கைக் குலத்திற்கு ஒரு கண்மணி போன நீதியும் ஒரே நீதிதான்.

மேலும், அகத்திய முனிவரது கமண்டலத்தி லிருந்த காவிரி நீரைச், சிவ குமாரன், காக்கையாகச் சென்று, கவிழ்த்து விட்டாராம். 'வான் பொய்ப்பினுந் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி', சோழ நாட்டிற்கு வளந்தருங் காவிரி, அத்தகைய காவிரி பெருகுவதற்குக், காக்கை காரணமாக விருந்த தென்றால், அது, காக்கைக் குலத்துக்கே பெரும்பேராகு மல்லவா? 'கங்கை கொண்ட சோழன்' என்பது போலக், 'காவிரி கொண்ட காக்கையார்' குலம் என்று, காக்கைகளுக்கு ஒரு விருது எழுதி விடலாம்.

அது நிற்கப், புலவர் தம்மைக் காக்கையென்று சொல்லுவதற்கு வேறு காரணங்களும் உண்டா? ஆம், உண்டு. இக் காலத்துப் பெரும்புலவ ரொருவர்,

'காக்கை குருவி யெங்கள் சாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்'

என்று வெற்றி முரசு கொட்டுகிறார்.

ஒநாய்க் குலத்திலும் பார்க்கக் கொடியது, மனிதக் குலம். ஒரு குலத்தினுள்ளே, ஒன்றினை யொன்று கொல்ல முயல்வதும், ஒன்று வாழ்வதைக் கண்டு மற்றையது மனம் எரிவதும், இந்த

மனிதக் குலத்து உயிர்களுக்கும், மனிதக் குலத்தோடு பழகிய நாய்க் குலத்து உயிர்களுக்குமே யன்றி, மற்றெந்தக் குலத்து உயிர்களுக்கும் கிடையாது. 'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்' என்ற பெரியோர் வாக்கின்படி, உறவினரோடு கலந்துண்ணுவது காக்கைக்கு இயல்பு. புசுண்டர் என்னும் ஒரு முனிவர் காக்கைக் குலத்தவரென்று பெரியோர் சொல்லக் கேள்வி.

கதையை நீடித்துவிட்டோம். காரிகை நூலாசிரியர், தம்மையே காக்கையென்று கூறியதும், 'பொல்லாக் காக்கை' என்று அடையடுத்துக் கூறியதும், பொருத்தமென்று வைத்துக் கொள்ளலாம். 'இமயஞ் சேர்ந்த காக்கை' பொன்னிறமாகுமென்று சொன்னாரே; இந்த உண்மையை இமயத்திலே ஆராய்ந் தறிந்து கொள்ள வேண்டுமென, இமயத்திற்கு வருமுன், என்னுள்ளத்திலே, ஓர் ஆசைபிறந்தது. வந்து ஓராண்டாகிறது; நான் கண்டறிந்தவற்றைச் சொல்லும் உரிமை யுண்டு.

நான் இவ்விடம் வந்து சேர்ந்தது, கார் காலமும் கூதிர்க் காலமும் ஒருங்கியைந்த இலையுதிர் காலத்தில். அக்காலத்திலே, ஆச்சிரமத்துப் பாதையின் இரு மருங்கிலும் ஓங்கி வளர்ந்து நிற்கும் தேவதாரு மரங்கள் நிரம்பப் பூத்திருந்தன. பூக்களிலிருந்து சிந்திய மகரந்தப் பொடியானது, பாதையினையும், பாதை யோரத்தி லிருந்த கற் பாவிய குடிசையினையும் பொன்னிற மாக்கிவிட்டது. சில பூக்களைப் பறித்துப் புறங்கையிலே பூசினேன்; கருமை பொன்மையாயிற்று. இக் காரணத்தினாலே தான், இம் மலைக்குப் பொன்மலை யென்று பெயர் எய்தியதாயிருக்கலாம் என்று நினைத்தேன்.

தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள்செறிந்து
மேவியபொன் வண்ணத்த வீதியெலாம்

என்று, எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். வந்து இரண்டு திங்களுக்குள்ளே, கூதிர்க்காலம் வந்தடுத்தது. தண்ணீருறைகின்ற கடுங்குளிர்; நாங்க ளெல்லோரும் விறகு கட்டைகளை யடுக்கி, நெருப்பினை வளர்த்துக், கை கால்களைக் காய்ச்சிக் கொள்வோம். கம்பிளிக் கால்மேசு, கம்பிளிக் கைமேசு, கம்பிளிச்

சட்டை, போர்வை இவையெல்லாம் அணிந்திருக்கும்போது கூடப் பல்லுக் கொடுக்கும். இப்படியிருக்க, ஒருநாள், வானம் இருண்டு, ஆலங்கட்டி பெய்தது. மிளகுப் பரிமாணம் முதல் கொட்டைப் பாக்குப் பரிமாணம் வரையு முள்ள பனிக்கட்டிகள் பேரிரைச்சலோடு பொழியும் போது, வானத்திலிருந்து விழும் செருமானியர் குண்டுக்கு அஞ்சி, ஒதுக்கிடந் தேடுகின்ற இலண்டன் மாநகர மக்களைப் போல, நாங்களும் வீட்டினுள்ளே நுழைந்து கொண்டோம். ஐஸ் கட்டியைப் போலத் திண்மையா யிருப்பதும், கொட்டைப்பாக் களவானதுமான ஆலங்கட்டி ஒன்று விழுந்தாலே தலையுடையப் போதுமான தாகும். சிறிது நேரத்திலே, ஆலங்கட்டி மழையும் இரைச்சலும் நின்றுவிட, ஓர் அமைதி யேற்பட்டது. ஞாயிற்றினது மெல்லென்ற கதிர்கள் வீசின; பறவைகள் ஒதுக்கிடத்தி லிருந்து புறப்பட்டன; நாங் களும் வெளியே வந்தோம்; காலை ஒன்பது மணி யிருக்கும்; காற்றுச் சிறிதேனுமில்லை. நந்தியாவர்த்த மலர்களையும், முல்லை முகைகளையும், மல்லிகை மெல்லரும்புகளையும், நறுக்கிய வெள் ளிச் சரிகையையும், பாலின் நுரையையும், அன்னத்தின் தூவி யையும் வானவர் வாரிவாரி யிறைப்பது போல இம்மழை வீழ்ந்தது. செங்கதிர்ப் பரிதி தண் கதிர் மதியம் போல விளங் கியது. நிலவுக் கதிர் விழுவதுபோல, மரங்களின் இலைகள்மீது பனி பொழிந்தது. நிலத்திலே நான்கு அங்குலக் கனத்திற்கு பனி மூடியது. பாற்கடல் போலப், பார்த்த விடமெங்கும், தூய வெள்ளை நிறம்; மலைகளெல்லாம் வெள்ளிக் குன்றங்களாக மாறிவிட்டன. மணற் சீனிபோல நிலத்தின்மேற் கிடந்த பனி யின்மேல் நாங்கள் வெறுங் காலோடு நடக்க, அதுவும் மணல் போலச், சொருசொருவென்று, விட்டுக்கொடுத்தது. குளிரைத் தடுக்கும் பொருட்டுச் சப்பாத்து அணிந்துகொண்டு, சிறு குழந் தைகளைப்போலப், பனியைக் கையி லெடுத்துத், திரட்டி, வீசி, ஆர்ப்பரித்து விளையாடினோம். இரண்டு நாள் கழித்து, மீட்டும் இம் மழை. கூரையிலிருந்து வடிகின்ற பனி, பளிங்குப் பிளவு போல அழகு காலும். மொத்தம் முப்பது அங்குலத்துக்கு மேல் பனி மழை பெய்யக் கண்டேன். தேவதாரு மலர்களைக் குறித்து எடுத்த பாட்டு நிறைவெய்தியது.

தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள்செறிந்து
மேவியபொன் வண்ணத்த வீதியெலாம் அன்னத்தின்
தூவியெனப் பானுரையின் தோற்றமென இமம்வீழத்
தாவில்புகழ் வெள்ளிவெற்பின் தவளநிறம் பெறுவனவே.

இப்படித் தோற்றிய வெள்ளி மலைகளைச் சூரியதேவன், தனது இரசவாத வித்தையினாலே, பொன்னாக்கும் விந்தையினைக் காண, அதிகாலையிலே விழித்தெழவேண்டும். நான் வசிக்கும் அறையி லிருந்து பார்க்க, நேரே தெரிவது, திருக்கேதாரமலை.

தொண்டாஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

என்று திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய திருக்கேதாரம்; தினமும் விழிதுயின் றெழுந்த வுடனே வடக்கு நோக்கித் தரிசிப்பது, அத் திருமலையைத் தான். அதற் கணித்தாகத், திரிசூலி; அதற்கப்பால் நந்தாதேவி - இது இந்தியாவிலே ஆக உயர்ந்த கொடுமுடி (இருபத்தாறுயிரம் அடிக்கு மேலானது). எவரெஸ்டு, தீபெத்து நாட்டிற் குரியது.

ஞாயிறு தோற்றத்துக்கு முன்னே, இருளிலே, காரிரும்பு போலத்தோற்றிய மலைச் சிகரங்கள், இளங்கதிர் பட்டவுடனே, பொன்னாகின்ற காட்சி விந்தையாயிருக்கும். கால்மணி நேரத் திற்குள்ளே, பொன்னெல்லாம் வெள்ளியாய்ப் போய்விடும். மீட்டும், மாலையிலே, செல்கதிர்க் கிரணம் செறியக், கால் மணி நேரத்திற்கு, இமயம், பொற்கோட் டிமயமாகும்.

நீலநிற விசும்பணவு நெடுங்குடுமி மலைத்தொடர்கள்
மேல்விழுந்த இமமழையால் வெள்ளியெனத் திகழ்வனவால்
காலையினு மாலையினுங் கதிரவனூர் வேதிக்க
மாலவனு ராடையென வயங்குவபொன் னிறம்படர்ந்தே.

செல்கதிர் பொன்னிற மானது; அது மரப்பாவையின் மேற் படின், மரப் பாவை பொற் பாவை போலத் தோற்றும்; பொன் னின் பாவையிற் பட்டால் எப்படி யிருக்கும், அப்படி யிருந்தார் களாம், தமிழ் மதுரையி லிருந்த பெண்கள் என, மாங்குடி மருத னார், மதுரைக் காஞ்சியிலே, கூறுகிறார்.

செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர்.

— மதுரைக் காஞ்சி, 410—413.

கருங்கல் மலை வெள்ளி மலை யாவதும், பொன் மலை யாவதும் எப்படியென அறிந்துகொண்டோம். காக்கைக்கு என்ன நிகழ்ந்த தென வாசகர்கள் வினவலாம்.

கோழி கூவிக், காகங் கரைந்தாற்றான், பொழுது விடியும் என்று தெற்கே யுள்ள பலர் நினைப்பது போலவே, நானும் நினைத்திருந்தேன். இது சிவபூமி; சூரியதேவன் ஒரு பணி விடைக்காரன்; ஆதலினாலே, ஒருவகை ஆரவாரமு மில்லாமல், உரிய காலத்திலே, பனிச்சென்று வந்து, கைகட்டி, வாய்புதைத் துக்கொண்டு நிற்பான். அவனது வருகையைக் குறித்துக் கோழியும், காகமும் கட்டியங் கூறுவதில்லை.

கூதிர்க் காலங் கழிந்தது. இளவேனிற் காலம் வந்தது. செடி கொடிகள் தளிரீன்று, முகை யரும்பிப் பூவலர்ந்தன. உச்சிப் பொழுதிலே, ஒருநாள், எங்கேயோ விருந்து, ஒரு காக்கை வந்தது. மெலிந்த தோற்றம். நமது காக்கைகளைப்போலக், உள்ளக் கிளர்ச்சியுடன் கரையாமல், 'இங்குவா,' 'இங்குவா,' 'இங்குவா' என்றுநலிந்தகுரலிலே கரைந்தது. பொன்னிறமோ என்று பார்த்தேன்; இல்லை. உருக்கினாற் செய்த அரத்தினது தோற்றமாக விருந்தது. ஏது, புலவர் சொல் பொய்த்து விட்டதோ என்று எண்ணினேன். புலவர் சொல் பொய்க்க வில்லை. காலை யெழுந்திருத்தலும், மாலை குளித்து மனைபுகுதலும் மேலான காக்கைகட் குரிய குணம். இந்த மூடக் காக்கை, காலையிளங் கதிரிலோ, மாலைச் செல் கதிரிலோ, தனது குல வொழுக்கம் குன்றாது, வந்திருக்குமாயின், செங்கதிர்ச்செல்வன் இரசவாதஞ் செய்து, ஒரு நாழிகைப் பொழுது, பொற் காக்கை யாக்கி யிருப்பான். உச்சிக் காலத்திலே, இது வந்ததுதான் தவறு என்று நினைத்தேன். காக்கையும் பறந்து போய்விட்டது. திருத்தக்க தேவரது பாட்டொன்று நினைவிற்கு வந்தது.

விழுக்கொடு வெண்ணஞ் சல்லா உகிர்மயிர் உமிழ்கட் பீளைப்
புழுப்பயில் குரம்பை பொல்லாத் தடிதடிக் கிந்த போழ்தில்
விழித்தியார் நோக்கு கிற்பார் பிள்ளையார் கண்ணுட் காக்கை
கொழிப்பரும் பொன்னிற் றேன்றுங் கொள்கைத்தாற் கொடியே
[யென்றான்.

பிள்ளை, கரிக்குருவி. 'கரிக் குருவியார் கண்ணுக்குக் காக்கையார் பொன்னொத்துத் தோன்றினர்' என்னும் பழமொழி இப்பாட்டினுட் பொதியப்பட் டிருக்கிறது. அங்ஙனம் உருச்சிறந்து தோன்றுவதற்குக் காரணம், விளைகின்ற காமம். அன்பு நோக்கு இரும்பையும் பொன்னுக்கிவிடும் என்பது ஒருதலை.

அதுபோலப், புலவர்களது அன்பு நோக்கு உளப்படுமாயின், என் புன்மொழியும் பொன்மொழியாம் என்னும் கருத்து, அமுத சாகரரது பாட்டினுள்ளே தொனிக்கின்றது. இமயம், தேவரும் முனிவரும் வாழுமிடம். சார்ந்ததன் வண்ணமாவது உயிர்க்கு இயல்பு. இங்கு வாழ்தலினாலே, உள்ளத்திலே படிந்து கிடந்த அறுவகைக் குற்றத்தின் கருமை நீங்க, உள்ளமானது தெளிவெய்துகின்றது. காலையிலும் மாலையிலும் திருவாளனது பேரருளினாலே, தியான வேளையிலே, உள்ளம் அவனது பொன் வண்ணத்திற் படிந்து நிற்கிறது. இதனை அநுபவத்திற் கண்டு, இமயத்தைச் சார்ந்த காரணத்தினாலே, உள்ளமாகிய கருங் காக்கையும் பொன்னுயிற்று எனத் துணிவெய்தினேன்.

# கலைச்சொல் லாக்கம்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி.எ., எல்.டி., ஜயன்பேட்டை.

(முற்றொடர்ச்சி: துணர் மிகூ, மலர் கூ, பக்கம் 358.)

## விடுபட்டுள்ள சொற்கள்

1. Absolute symmetry-சார்பில் சமச்சீர்
2. Adfected-கலப்புப்படிய
3. Angle-Interior, opposite-உள் எதிர் கோணம்
4. Arm (of an angle)-கைகள் (கோணத்தின்)
5. Axiom-அடிப்படை யுண்மை, வெள்ளிடை யுண்மை
6. Balance sheet-ஐந்தொகை
7. Central line-மைய வரை
8. Cone, Oblique-சாய் வட்டக் கூம்பு
9. ,, Right-செவ் வட்டக் கூம்பு
10. Consistent-ஒப்புடைய
11. Cyclic expression-வட்டச்சீர்க்கோவை
12. ,, symmetry-வட்டச் சமச்சீர்
13. Derived equation-வழிச் சமன்பாடு
14. Eliminant-நீக்கப்படுவது
15. Enunciation, General-பொது விவரிப்பு
16. ,, Particular-பற்றிய விவரிப்பு
17. Generating line-ஆக்கு வரை
18. Group-தொகுதி
19. H. C. F.-மீப்பெரு பொதுச்சினை
20. Homospecies-சம வினங்கள்
21. Interchange-ஊடுமாற்று
22. L. C. M.-மீச் சிறு பொது அளவை
23. Mean-இடைவு
24. ,, Arithmetic-(மேல்) கூட்டலிடைவு
25. ,, Geometric-பெருக்கலிடைவு
26. ,, Harmonic-கீழ்க் கூட்டலிடைவு
27. Method of exhaustion-(புறக்கொள்கை) ஒழிமுறை

28. Minuend-கழிப்பது, கழிக்கக் கொடுப்பது
29. Notation, Ordinary-வழங்கியற் குறியீடு
30. Partial fraction-பகு பின்னம்
31. Pedal line-அடிவரை
32. Perpendicular Bisector-குத்துச் சமவெட்டி
33. Polygon, Convex-குவி பலகோணம்
34. ,, Equiangular-சமகோண பலகோணம்
35. ,, Equilateral-சமபக்க பலகோணம்
36. ,, Reflex-மடக்குப் பலகோணம்
37. ,, Regular-சம பலகோணம்
38. Pure Quadratic-தூய இருபடியம்
39. Quantities-இனங்கள்
40. Radication-மூலங்காணல்
41. Ratio, Addendo-கூட்டுத் தகவு
42. ,, Compounded-அடுக்குத் தகவு
43 ,, Ex-equali-சரிக்குச்சரி தகவு
44. ,, of equality-சரிதகவு
45. ,, of greater inequality-மிகைத்தகவு
46. ,, of less ,, குறைத்தகவு
47. Ratios, Compound-தொகுப்புத் தகவுகள்
48. Real quantity-உள்ள கணியம்
49 Secant-வட்டவெட்டி
50. Series, Arithmetic-மேல் கூடற் றொடர்
51. ,, Geometric-பெருக்கற் றொடர்
52. ,, Harmonic-கீழ் கூடற் றொடர்
53. ,, Mathematical-கணக்கியற் றொடர்
54. Square measure-பரப்பு அளவை
55. Subtrahend-கழியெண், கழிவது
56. Successive-வழிமுறையான
57. Tangent, Direct Common-நேர் பொதுத் தொடுகோடு
58. ,, Transverse Common-குறுக்குப் பொதுத் தொடு கோடு)
59. Test-ஆய்வு
60. ,, Algebraic-குறியளவை யாய்வு
61. ,, Arithmetic-எண்ணளவை யாய்வு
62. ,, Geometrical-வடிவளவை யாய்வு
63. ,, Numerical-எண்முறை யாய்வு

64. Third proportional-பொருத்த மூன்முஞ்சினை
65. Triangle, Acute angled-குறு முக்கோணம்
66. ,, Equiangular-சம (கோண) முக்கோணம்
67. ,, Equilateral-சம (பக்க)முக்கோணம்
68. ,, Isosceles-இணை முக்கோணம்
69. ,, Obtuse angled-விரி முக்கோணம்
70. ,, Right angled-செம் முக்கோணம்
71. ,, Scalene-ஒவ்வா மூக்கோணம்
72. ,, Similar-வடிவொவ்வு முக்கோணம்
73. Turning point-திரும்பிடம்
74. Type-மாதிரி
75. Vigesimal-இருபதன், இருபதின் பகுப்பு

## விடுபட்டுள்ள குறியீடுகள்

1. — By (fraction line)-ஆல்
2. = Is equal to-சமன்
3. ≡ Is equal in all respects-அடங்கலுஞ் சமம்
4. ‖ Is parallel to-ஒருபோகாக
5. ||| Is similar to-ஒரு போன்மையாக
6. Σ Sigma-கோவை மடக்கு (கோ. ம.)
7. ∽ Difference between-ஏற்றத்தாழ்வு
8. > Is greater than-விடப்பெரிதாய்
9. < Is less than-விடச்சிறிதாய்
10. ∴ Therefore-ஆதலின், ஆகையால்
11. ∵ Because-ஏனெனில்
12. π Pie-பை
13 $f$ $(x)$, Function of $x$-சார் (க)
14. S $\left(\frac{a+b+c}{2}\right)$-ஞ $\left(\frac{அ+இ+உ}{2}\right)$
15. $\text{Log}_a$ N-மட$_{அ}$ ந
16. R ர (சுற்றுவட்ட ஆரை)

II

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், ஆங்கில வழிக் கல்வி கற்பித்தல் உயர் கல்லூரிகளில் (High Schools)

ஒருவாறு நீங்கியும், இன்னும் ஆங்கில எழுத்துக்களும் குறியீடு களும் விடாமலிருப்பது வருந்தத்தக்கதே. சிறப்பாய், கணிதத் திலும், பூத நூலிலும், பொதுவாய், மற்றெல்லா நூல்களிலும், அரசாங்க வெளியீடுகளிலும் ஆங்கில எழுத்துக்களும், குறியீடு களும், வேறு வழி யில்லாதது போல, வழங்கப்படுகின்றன. இவை எத்துணை காது வெறுப்புண்டாக்குவன வென்பது நமக்குப் பழக் கத்தால் படவில்லை. 'பழக்கங் கொடியது பார் பாறையினுங் கோழி கிழிக்கும்' என்பதுபோல, ஆங்கிலப் பாறையில், தமிழ் மக்களாய கோழிகள் கிழித்துக் கிழித்துச் சலிக்காதது வியக்கத் தக்கதே. தமிழே தெரியாத ஆங்கிலர்க்கும், ஆங்கிலமே தெரி யாத தமிழர்க்கும், இன்னும், இரு மொழி யறிந்தும் காது மழுங்காத சிலருக்கும், இப்பழக்கத்தின் இசைவின்மையும் இசை யின்மையும் நன்கு விளங்கும்.

மணிப் பவள நடை, வேடிக்கைக்கும் அறியாமைக்குந்தான் எடுத்துக்காட் டாகு மென்றிருந்தோம். அதை ஒரு சிறந்த நடையாகக் கருதி, அவ் வழியே கல்வி கற்பிக்கவும் புகுந்துள்ள மக்களின் மதி எவ்வளவு தாழ்ச்சி யுற்றிருக்கவேண்டு மென்பதை நோக்க, வியப்படையாம லிருக்க முடியவில்லை. 'நான் மார்னிங் கில் எழுந்திரிச்சதும் பெட்காபி சாப்பிட்டுத்தான் மறுவேலை பார்க்கிறது வழக்கம்' என்று பேசக் கூசுவதில்லை; சொந்தக் கடிதங்களில் எழுதவுங் கூசுவதில்லை. ஆனால், நூல்களில் எழுதக் கூசுகிறோம். எனினும், சிறந்த பாட புத்தகங்களில்கூட 3a-3bஐ —7 ஆல் பெருக்கு, என எழுதி, மூன்று ஏ, மைனஸ் மூன்று பி-யை மைனஸ் ஏழால் பெருக்கு என வாசிக்கின்றோம். Simplify என்பதைச், சிம்பிளிபை செய் எனச் சொல்வது இகழத் தக்கதென உணர்ந்த நாம், ஏன் யாவற்றையும் தமி ழெழுத்துக்களாலேயே எழுதித், தமிழ்மொழிக் கிசைய வாசிக்க முயலக்கூடாது?

கூடிய விரைவில், தாய்மொழி முதன்மைபெற்று, ஆங்கிலம் இரண்டாவதிடம் பெறு மென்பதும், பல்கலைக் கழகக் கல்வியும், ஆராய்ச்சிகளுங்கூடத் தாய்மொழி வாயிலாகவே நடைபெறும் நிலையை யடையு மென்பதும், சிறிது முன்னோக் குடை யாருக்கும் விளங்காமற் போகா. அதற்குத்தக, இப்பொழுதே அடிகோலிக் கொள்வதே அறிவுடைமை யாகு மாதலின், வீண் தொல்லைகளை எளிதில் போக்குமாதலின், அதற்கான வழிகளை ஈண்டுக் காட்டுவாம்.

1. எண் கணிதக் குறியீடுகளைத் தமிழ்ப்படுத்தி வாசிக்கு முறை.

$$\frac{\left[\dfrac{3\frac{1}{4}-\frac{4}{7}}{7\cdot1 \text{ of } \frac{5}{18}}\right]\div\frac{4}{7}+\dfrac{\frac{1}{2}\div4\frac{1}{2}}{\sqrt[3]{8}\times\sqrt{3\cdot2}}}{3+\dfrac{5\frac{3}{4}}{1\frac{1}{8}}-\left\{3\cdot64-\overline{3\cdot05-2\cdot\dot{6}\dot{4}}-(2\cdot9-2\cdot2\dot{3})\right\}}$$

எனும் கோவையை, பவ்வடைப்புத் திறப்பு, மூன்றும் ஒன்றின் கீழ் நான்கு, கழி, நான்கின் கீழ் எழு, இவ்விரண்டின் கீழ், எழு புள்ளி ஒன்று, இன், ஐந்தின் கீழ் பதினெட்டு, பவ்வடைப்பு மூடல், ஆல், நான்கின் கீழ் எழு, கூட, ஒன்றின் கீழ் இரண்டு, ஆல், நான்கும் ஒன்றின் கீழ் இரண்டு, இவ்விரண்டின் கீழ், எட்டின் மும் மூலம், ஐ, மூன்று புள்ளி இரண்டின் இரு மூலம், முழுக்கீழ், மூன்று, கூட, ஐந்தும், மூன்றின் கீழ் நான்கு, கீழ், ஒன்றும் ஒன்றின் கீழ் எட்டு, கழி, இரட்டைக் கவிப்புத் திறப்பு, மூன்று புள்ளி ஆறு நான்கு, கழி, தொகுப்புக் கோட்டின் கீழ், மூன்று புள்ளி சுழி ஐந்தும், கழி, இரண்டு புள்ளி ஆறு நான்கு மடக்குகளும், கழி, அடைப்புத் திறப்பு, இரண்டு புள்ளி ஒன்பது, கழி, இரண்டு புள்ளி இரண்டு மூன்று மடக்கு, அடைப்பும் இரட்டையடைப்பும் மூடல், என வாசித்தல் எளிதாம்.

2. குறிக்கணித சமன்பாட்டைத் தமிழ்ப்படுத்தி வாசிக்கு முறை:—

$(x^3-y^3)=(x-y)(x^2+xy+y^2)$ என்பதை $(\text{க}^3-\text{ங}^3)=(\text{க}-\text{ங})(\text{க}^2+\text{கங}+\text{ங}^2)$ எனவெழுதிக், க முப்படி கழி ங முப்படி சமம் க கழி ங முழு ஐ, க இருபடி, கூடு கங, கூடு ங இருபடி எனவும்,

$\sum(b+c-a)^2(b-c)+4\prod(a-b)=0$ என்பதை

$\sum(\text{இ}+\text{உ}-\text{அ})^2(\text{இ}-\text{உ})+4\prod(\text{அ}-\text{இ})=0$ என எழுதி, கோ. ம. இ கூடு உ கழி அ முழு இருபடி, ஆல், இ கழி உ, கூடு, நான்கு பை ஆல் அ கழி இ சமம் சுன்னம் எனவும்;

$2^{s}=(a+b+c)$ ஆனல் $\sum S(s-b)(s-c)-\prod(s-a)$ என்பதை a, b, c, மூலம் விளக்குக என்பதை,

$2\text{ஞ}=(\text{அ}+\text{இ}+\text{உ})$ ஆனல் $\sum\text{ஞ}(\text{ஞ}-\text{இ})(\text{ஞ}-\text{உ})-\prod(\text{ஞ}-\text{அ})$ என்பதை அ, இ, உ மூலம் விளக்குக எனத் தமிழில்

எழுதி, இருளுக்கு, அ கூடு இ கூடு உ சமம் ஆனல், கோ. ம. ளு ஆல், ளு கழி இ, ஆல், ளு கழி உ, கழி, பை ஆல், ளு கழி அ என் பதை அ, இ, உ மூலம் விளக்குக எனவும் வாசித்தல் முறை யுடைத்து. (தொடரும்.)

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

## சித்தாந்தப் பிரகாச சபை.

**சென்னைச்** சித்தாந்தப் பிரகாச சபையார் (8—9—40) ஞாயிற்றுக்கிழமை நடந்த சபையின் பதினூருமாண்டு பொது வுறுப்பினர் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறை வேற்றினர். அத்தீர்மானங்கள் பல்லாற்ருனும் பயன்படுதற் பொருட்டு எல்லா மக்கட்கும் அறிவிக்கப்படுகின்றன.

(1) தற்போது நடக்கும் ஐரோப்பியப் போரில் உலக நாகரிகத்தையும், மக்கள் தன்னிச்சையையும் காப்பாற்றுவதற் காக, பிரிட்டன் ஈடுபட்டிருப்பதால், அப்போரில் பிரிட்டன் வெற்றிபெற வேண்டுமென்று இக்கூட்டம் கோருவதுடன், சபையின் உறுப்பினர்களை எல்லாவிதமான உதவிகளையும் பிரிட் டனுக்குச் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) மக்கள் பெயர்களுக்கு முன்பாக அரசாங்க எழுத்து முறைகளில் 'ஸ்ரீ' என்னும் சொல்லை ஆளும்படி இட்ட கட்ட ளையை மாற்றித், '**திரு**' என்னும் சொல்லை ஆளும்படிக் கட்டளை யிட வேண்டுமென இக்கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) அடுத்த ஆண்டு மக்கள் எண்ணிக்கை கணக்கெடுக் கும்போது, தமிழர்கள் தங்களைத் '**தமிழர்**' என்றும், தங்கள் சமயத்தைச் 'சைவம்' அல்லது 'வைணவம்' என்றும் சொல்ல வேண்டுமென்றும், எக்காரணம் கொண்டும் தங்களை 'இந்து' வென்றும், தங்கள் சமயம் 'இந்து சமயம்' என்றும் சொல்லக் கூடாது என்றும் இக்கூட்டம் தமிழர் அனைவரையும் வற்புறுத் திக் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) உயர்தரப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வரும் உல கியல், அறிவியல், நாட்டு வரலாறு முதலிய பாடங்களில் வட மொழிக் கலவாத தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக வெளி வரும் பாடபுத்தகங்களைக் கொண்டே, அவைகள் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் கழகங் களில், தமிழ்த் தனிமொழியே போற்றும் தமிழ்ப்புலவர்களையே

உறுப்பினராக அமைக்க வேண்டுமென்றும், இக்கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(5) தற்போது இருந்துவரும் சிவில் சட்டம் தமிழருக்கு ஏற்றதல்ல வாதலால்,அதைத் தமிழருக்குப் பயன்படுத்தக் கூடாதென்றும், தமிழர் வாழ்க்கைக்குப் பொருத்தமான சட்டங்களை வகுக்க அரசாங்கத்தார் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இக்கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

(6) "சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகம்", **"சிதம்பரம் அண்ணுமலைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்"** என அழைக்கப் படவேண்டு மென்று இக் கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதுடன், அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.

(7) மேற்கண்ட தீர்மானங்களை அரசாங்கத்தாருக்கு அனுப்புவிப்பதோடு, மற்றத்தமிழ் மொழிக் கழகங்களுக்கும், சமயக் கழகங்களுக்கும் அனுப்புவித்து, அக்கழகங்களும் இத்தீர்மானங்களுக்குப் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

65, முல்லா சாயபுத் தெரு,
சென்னை.

(கட்டளைப்படி)
ப. அரங்கநாதம்,
செயலாளர்.

---

**திருப்பாதிரிப்புலியூர்** ஞானியார் திருமடத்தின் தலைவர் உயர் திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், சைவ நூலறிவும், தமிழ்ப் புலமையும் பெற விரும்புவார் பொருட்டு, அவர்கட்கு, ஈஸ்டர் விடுமுறையிலேனும் கோடை விடுமுறையிலேனும், பயிற்சியளிக்கத் திருவுளங் கொண்டுள்ளார்கள். இங்ஙனம் பயில விரும்புவார்க்கு மடத்திலேயே இலவசமாக உணவளிக்கவும், பயிற்ற முன்வருவார்க்குத் தகுந்த ஊதியம் கொடுக்கவும் திருவுளங்கொண்டுள்ளார்கள்.

பயில விரும்புவாரும், பயிற்ற விரும்புவாரும், தத்தமக்கு வசதியான காலத்தைச், சென்னை நாட்டாண்மைக் கழகக் கண்காணிப்பாளரின் உதவியாளர், திரு. அரங்கசாமி முதலியார் அவர்கட்கு (Personal Assistant to the Inspector of Local Boards) தெரிவித்தால் அவர், யாவர்க்கும் ஏற்றதொரு காலத்தைத் தேர்ந்து, வேண்டுவன செய்வார்.

தமிழ் மக்களெல்லாம் இந்த உதவியைப் பெற்றுப் பயன் பெறுவார்களென்று நம்புகின்றோம்.

கரந்தைக் கூட்டுறவு மின்னியக்கிப் பதிப்பகம், தஞ்சாவூர்.

ஆனிரை கோடலின், இவர் அரசாது ஆணையை நீங்கினா ராவர்; ஆதலால், அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம்' என இளம்பூரணரும் பிழைபட்ட பிற்காலக் கொள்கைகளைக் கடிதல் காண்பாம்.

இனி, முடிவேந்த ரல்லார் சிலரைப் புகழ்ந்துவரும் வெட்சிப் பாடாண் புறப்பாட்டுக்களைக் காட்டி, அவை மன்னர் பணிப் பின்றி ஆகோள் தன்னுறு தொழிலாய்க் கொள்வதற்கு மேற் கோள் என்பாருளர். அப்பாட்டுக்கள் குறுநில மன்னரைப் பற்றியவை. 'மன்பெறு மரபின் ஏனோ' ராகிய குறு மன்னருக்கு 'வேந்து வினையியற்கை வேந்தனின் ஒரீஇய (அவ்) வேனோர் மருங்கினும் எய்திடன் உடைத்து' எனத் தொல்காப்பியமே கூறுகிறது. எனவே, இன்னோரைப் பாராட்டும் வெட்சிப்பாடாண் புறப்பாட்டுக்கள், ஒரு வகையாய் மன்னராவார்க்கு உறுதொழிலே கூறுவனவாம்; வேந்தன் பணிப்பின்றியும் மக்களில் யாரும் தன்னுறு தொழிலாக நிரை கவரும் தவறுக்கு இப்பாட்டுக்கள் மேற் கோளாகாமை வெளிப்படை.

சூ. **3.** படையியங் கரவம், பாக்கத்து விரிச்சி,
புடைகெடப் போகிய செலவே, புடைகெட
வொற்றி னாகிய வேயே, வேய்ப்புற
முற்றி னாகிய புறத்திறை, முற்றிய
ஊர்கொலை, ஆகோள், பூசன் மாற்றே,
நோயின் றுய்த்தல், நுவல்வழித் தோற்றம்,
தந்துநிரை, பாதீடு, உண்டாட்டு, கோடையெனை
வந்தவீரேழ் வகையிற்றாகும்.

**கருத்து** :—இது, முதற் சூத்திர விறுதியில் "வெட்சிதானே உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே" எனத் தொகுத் தோதிய துறைகளின் வகையும் பெயரும் விளக்குவதாகும்.

**பொருள்** :—படை யியங் கரவம்=நிரைகவரப் படைநடக் கும் ஆர்ப்பு;

வெவ்வாண்மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்று—ரெவ்வாயு
மார்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு, 236)

பாக்கத்து விரிச்சி=செல்லும் பக்கத்தே புள்வாய் நற்சொல்லின் குறிப்பறிதல். (விரிச்சி-புள்ளொலியால் நல்ல தறிதல்);

மன்னவன் னிரைவந்து கண்ணுறு
மின்ன நாளினுற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரன்
முன்னங் கூறினன் முழுதுணர்வினன். (சிந்தாமணி, 415.)

...........................................
நல்வேய்தெரிகானவன் புள்வாய்ப்புச் சொன்னகணி

(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

வேற்றூர்க் கட்சியுட்காரி கடியகுரலிசைத்துக் காட்டும்போலும்,
......மறவன் கையில் ஏந்திப் புள்ளும் வழிப்படர புல்லார்
நிரைகருதிப் போமேபோலும்.

(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்.)

புடைகெடப் போகிய செலவு=பக்கத்து இடமில்லையாம் படி படை பரந்துசெல்லுதல்;

வெவ்வாள் மறவர் மிலைச்சிய வெட்சியார்
செவ்வானம் செல்வதுபோற் செல்கின்றர்—எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு.

(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு, 1236)

புடைகெட ஒற்றின் ஆகியவேயே=வேற்றுப் புலத்து இருதிறத்தும் ஒற்றறிய இடமில்லையாம்படி ஒற்றரால் அறிந்த உளவும்;

ஒருவ ரொருவ ருணராமற் சென்றங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவர
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு. (பழம்பாட்டு.)

தம் மொற்றர் இனியறிய இடமில்லாதாயிற்று, அவர் முற்றும் ஒற்றி முடிந்ததனுல், பிறர் ஒற்ற இடமில்லையாயிற்று, அவரறியாவாறு தம் மொற்றர் மறைவில் ஒற்றிய திறப்பாட்டினுல்.

வேய்ப்புற முற்றின் ஆகிய புறத்திறை = உளவறிந்த சூழலை வளைத்து அற்றனேக்கி அடங்கியிருத்தல்.

" காந்தியல் காட்டுத் தீப்போலப் பெரிதும்
பரந்துசெல் மள்ளர் பதிந்தார்—அரந்தை
விரிந்தவியு மாறுபோல் விண்டோயத் தோன்றி
எரிந் தவியும் போலுமிவ் வூர்."

(பதிதல்=அமைதியாகத் தங்குதல். அரந்தை=துன்பம்.)

முற்றிய வூர்கொலை=வளைந்துகொண்ட நிரை மீட்கப் பொருவாரைக் கோறல்; (ஊர்-மீட்கப் பொரும் ஊரவர்க்கு ஆகு பெயர்)

சென்ற நிரைப்புறத்துச் சீறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றுண்
டிகலுழந்த வல்வில் விளையோர்புண் டீரத்
துகளெழுங்கொல் பல்லான் ரெழு. (பழம்பாட்டு)

ஆகோள் = ஆனிரை கொள்ளுதல்;

........................................
.........புல்லாரின நிரை செல்புற னேக்கிக்
கையிற் காட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றி யோனே. (புறம்-257)

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகாந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணுய் (புறம்-259)

எனும் புறப்பாட்டடிகளும் நிரைகொண்டோர் நிலையே கூறும்.

பூசல் மாற்று=நிரைகொண்டு மீள்வோர் மீட்போரால் நேரும் பூசலை விலக்குதல்;

ஒத்தவயவ ரொருங் கவிய நாண்படாத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றூர்
தம்பூசல் மாற்றி நிரைகொள்வான் றூக்கினூர்
வெம்பூசன் மாற்றிய வில். (பழம்பாட்டு)

போர் இன்றி நிரைகொள்வதே நோக்காதலின், போர் என்னாது பூசல் எனப்பட்டது. பூசல்-போரின்முன் நிகழும் ஆர்ப்பு. போராய் வளருமுன் அதனைத் தடுத்து விலக்கல் வெட்சியார் வினையாதலின், பூசல் மாற்றெனப்பட்டது.

நோயின் றுய்த்தல்=பற்றிய நிரை வருந்தாவாறு கொண்டு செலுத்தல்;

........................................................
முல்லை வகுந்திற் போகிப் புல்லருந்திக்
கான்யாற்றுத் தெண்ணீர் பருகிக் காமுறக்
கன்றுபா லருந்துபு சென்றன மாதோ
....................கவைஇய நிரையே.

(ஆசிரியமாலை-புறத்திரட்டு 1242)

நுவல் வழித் தோற்றம்=தம்மவர் புகழும்படி நிரைகொண்டார் மீளும் பொலிவு;

........................................................
ஒன்னூர் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென் ஐக்கு
உழையோர், தன்னினும் பெருஞ்சா யலரே.

(புறம். 262. மதுரைப் போலவாயார்)

தந்து நிறை = கொண்ட நிரையைத் தம திடத்துக் கொணர்ந்து நிறுத்தல்;

கயமலர் உண்கண்ணாய் காணாய் நின்ஐயர்,
அயலூர் அலர எறிந்தநல் ஆனிரைகள்
நயனின் மொழியின் நரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்த.

(வேட்டுவ வரி.சிலப்பதிகாரம்.)

குளிறுகுரன் முரசங் கொட்டின் வெரூஉங்
களிறுருடுதேர் காண்டலு மாற்று—ஒளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் புறங்கான
மெல்லாம் பெறுக விடம். (பழம்பாட்டு)

பாதீடு=நிரை கொண்டோர் பரிசில் தம்முட் பங்கிடுதல்.

நேரார் புலத்து நிரையைக் கவர்ந்தெதிர்த்த
போரார் மறவர் புறங்கண்டு—பாராளும்
வேந்தனைமுன் வாழ்த்தினர் வெட்சி முனைஞரவன்
ஈந்தபொருட் பாதிடுவா ரின்று.

(பாதிடுதல்=பங்கிடுதல்.)

உண்டாட்டு=வெட்சியோர் வெற்றி மகிழ்ச்சியால் உண்டு களித்தல்,

முட்காற் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கந் தார
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி வீங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே........................

(புறம் 258)

(கந்தாரம்=ஒருவகை மது. தலைச்சென்று=முன்சென்று.)

கொடை=வென்று கொண்டோர், துடியன், கணி, பாணர் முதலிய இரவலர்க்கு ஈந்துவத்தல்;

இளமா எயிற்றி! இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் ஆனிரைகள்
கொல்லன் துடியன் கொலைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர் தம்முன்றில் நிறைந்தன.
(வேட்டுவ வரி-சிலப்பதிகாரம்)

.........................புல்லணற்காளை
யொருமுறை யுண்ணு வளவைப் பெருநிரை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்கும். (புறம். 258)

என வந்த ஈரேழ் வகையிற்றாகும்=என்று இவ்வாறு எண்ணப்பட்ட பதினான்கு வகைப்படும் (வெட்சித் துறைகள்.)

குறிப்பு :—செலவே, வேயே, மாற்றே என்பனவற்றுள் ஏகாரம் அசைநிலை; எண் ணேகார மெனினும் அமையும். (வெட்சித் துறை) யென்பது மேற்சூத்திரத்தினின்றும் அவாய் நிலை எழுவா யாயிற்று.

சூ. 4. மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே.

கருத்து :—இது, மேற் கூறிய வெட்சி விளக்கத்தி லமையாத போர்த்துவக்கக் குறியாகும் வெட்சிவகை வேறு சில கூறுகின்றது.

பொருள் :—மறங்கடைக் கூட்டிய=மிடல் மலிவால் அடல் விருப்பின் விளைந்த; துடிநிலை=முரசு பராவுதலும்; சிறந்த கொற்றவை நிலையும்=போருக்குச் சிறப்புரிமையுடைய கொற்றவைக் கடவுளைப் பராவுதலும்; அத்திணைப் புறன்=(ஆகிய இவ்வெட்சி வகைகளும்) மேற்குறித்த குறிஞ்சித் திணைக்குப் புறனாகும்.

குறிப்பு :—'மறங்கடைக் கூட்டிய' என அடை கொடுக்கப் பட்டது; இதுவும் 'மறனுடை மரபாம்' புறத்திணையெனற்கும். இதன்மேல் நடத்தக் கடவது போரேயாதலானும், போர்த் தொடக்கமே வெட்சித் திணையாமாதலானும், ஆகோளைப்போலவே முரசு பரவுதலும், தொடங்கும் போரில் வெற்றி விளைக்கும்படி கொற்றவை பராவுதலும், போர்த் தொடக்கநிகழ்ச்சிகளாமாதலானும், பின்னைய விரண்டும் முன்னையது போலவே வெட்சித் திணையாய்க் குறிஞ்சிக்குப் புறனா யமையும் பெற்றி இதிற் கூறப்பெற்றது. அகரச்சுட்டு 'புறன்' என்னுங் குறிப்பால் வெட்சிக்கு அகமாக முதற்சூத்திரத்திற் குறித்த குறிஞ்சியையே குறிக்கும். அகரச் சுட்டு வெட்சித் திணையைக் குறிப்பதாகக் கொண்டு, துடிநிலையும் கொற்றவை நிலையும் வெட்சிக்குப் புறனும் என்பர் நச்சினார்க்கினியர். வெட்சியே புறனாதலானும், பொதுவியல் பாடாண் முதலியவற்றைப் புறப்புறமென வகுத்த வெண்பாமாலை முதலிய பின்னூலாரும் 'துடிநிலை' 'கொற்றவைநிலை' களைப் புறப் புறமென்னாது வெட்சியின் துறைகளாய் அடக்கினராதலானும், இச்சூத்திரத்தின் அகரச்சுட்டு வெட்சிக்கு அகமாகிய குறிஞ்சியையே குறிப்பது தேற்றம்.

முதற் சூத்திரத்தில், வெட்சியைக் கரவில் நிரைகவர்தல் என விளக்கியதால், அதிலமையாமல் வெட்சியின்பாற்பட்டுப் போர்த்துவக்கத்தில் நிகழ்பவற்றுள் இவ்விரு பராவுதலின் இன்றியமையாமைபற்றி இவற்றை விதந்து கூறல் வேண்டப் பட்டது. முன் அகப்பகுதியில் உரிப்பொருள் ஐந்தில் புணர்வும் புணர்தனிமித்தமும் குறிஞ்சியென விளக்கியபின், அவ்விலக் கணத்தில் அமையாத 'கலந்த பொழுதை'யுங் 'காட்சியை'யும் பிற சிலவற்றையும் புணர்வேபோல் குறிஞ்சிப்பாற்படுமெனக் குறித்து வேறு சூத்திரம் கூறினதுபோலவே, அக்குறிஞ்சியின் புறமான வெட்சி யிலக்கணத்திலடங்காத துடிநிலை, கொற்றவை நிலைகளும் போர்த்துவக்கமாம் வெட்சியின்பாற்படுமென்பதை இச்சூத்திரத்தால் விளங்க வைத்தார்.

போரற்றபோது முழக்காதிருந்த முரசை யெடுக்குங்கால், பராவி யெடுப்பது பண்டை வழக்காமென்பதை,

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை……………… (புறம். 50)

என்னும் மோசிகீரனர் புறப்பாட்டாலும்,

தூத்துகி லுடுத்துத் தொடியுடைத் தடக்கைக்
கோத்தொழி லிளையர் பூப்பலி கொடுத்துச்
செம்பொன் னெல்லின் செங்கதிர் சூட்டி
வெண்டுகி விட்ட விசய முரசம்.

என்ற பெருங்கதை, 39-ஆவது காதை, 21-24 வரிகளின் குறிப் பினும் அறிக. போர் விரும்பியோர் முதலில் வெற்றி கருதிக் கொற்றவையைப் பராவுதல்,

வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி

வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
……………………………………………
அமரிளங் குமரியு மருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே.

என்னும் சிலப்பதிகார வேட்டுவ வரி 60-64, 73-74 வரிகளி லும், மற்றும் பழஞ்செய்யுள்களிலும் பரக்கக் காணலாம்.

இனி, 'துடிநிலை' யென்னுமிடத்துக் 'குடிநிலை' என இளம் பூரணர் கொண்ட பாடத்தின் பொருத்தம் புலப்படவில்லை. 'ஆகோள்', 'கொற்றவைநிலை' களைப்போல, 'குடிநிலை' போர்த் தொடக்கத்திற்கு இன்றியமையாத தன்று.

இவ்வியலில் பின் 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்' துறைகளெனக் கூறப்படுவன மூன்று. அவற்றுள், முதலது கொடிநிலை (புறத்திணை சூ. 33). அஃதொழிந்த மற்றிரண்டும் புறத்திணைத் துறைகளாக முன் வேறு சூத்திரங்களில் விளக்கப் பெற்றுள்ளன. அவற்ரேடு அவ்வாறு புறத்திணை எதற்கும் துறையாக யாண்டும் விளக்கவோ சுட்டவோ பெருத கொடிநிலை யை வாளாகூட்டி, ஒருபரிசா யெண்ணுதல் அமைவுடைத்தன்று. புறத்துறைகளாக வேறு சூத்திரங்களில் விளக்கப்படும் இரண் டனேடு பின் சூத்திரத்தில் கொடிநிலை வாளா கூட்டிக் கூறப் பெறுதலால், அவையொப்பக் கொடிநிலையும் புறத்துறையாம் பரிசு பிறிதிடத்தில் சுட்டப்பெறுதல் முறையாகும். அதனு லும், கொடியெடுப்பு போர்த் துவக்கத்தில் நிகழ்வதொன்ருத லானும், கொடி நிலையை கொற்றவைநிலையோடு வெட்சி வகை யாய் இதில் தோல்காப்பியர் கூறினர் எனக் கொள்ளுதலே சிறக் கும். அக்கொடிநிலைப் பாடம், நாளடைவில் ஏடெழுதுவோ ரால் குடிநிலையாக மாறி இளம்பூரணர் கண்டிருத்தல்வேண்டும். அப்பாடம் சிறவாமையால் அதனைப் பொருள் பொருந்த போர்க் குரிய துடிநிலையாக்கி நச்சினர்க்கினியர் பாடங்கொண்டதாகக் கருதற்கு இடனுளது. அன்றியும், 'துடி' சூறைசுட்டும் பாலை நிலப் பறையே யாதலானும், எல்லா நிலத்துக்கும் பொதுவான போர்ப்பெரு முரசுக்குப் பெயரன்ருதலானும், இங்கு 'துடி நிலை'ப் பாடத்தினும் 'கொடி நிலைப்' பாடமே சிறப்புடைத்